## சேலம் மாநகராட்சி

### ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. ரெ. சதீஷ், எம்.ஏ. எம்.பில்., அவர்கள்

### கட்டிட அனுமதி உத்திரவு

(சேலம் மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 272, 273, 279–ன்கீழ் பிறப்பிக்கப்பட்டது)

க.அ.எண்: இ–10 / 16 / 2020

க.வி.எண்: இ–10 / 23 / 2020 நாள்: 09.03.2020

பொருள்: கட்டிட அனுமதி – சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் – கொமாரசாமிபட்டி கிராமம் – Ward – J - Block - 55 - TS.No. 3 – புதியதாக அடுக்கு மாடி கட்டிடம் கட்ட சேலம் மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 272 ( 1 ) 273, 279-ன்படி மனை மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல் உத்திரவு பிறப்பித்தல்– தொடர்பாக.

பார்வை:
1. திரு. K.S.ராமானுஜன், திருமதி. R. சுதா வாசுதேவன் , சேலம், என்பவரின் விண்ணப்பம் நாள் 06.02.2020.
2. இரசீது எண்கள்

| | | | |
|---|---|---|---|
| பாதாள சாக்கடை திட்ட வைப்பு தொகை<br>கட்டிட அனுமதி கட்டணம் | ரூ.1,46,750/- | 0004148 | 09.03.2020 |

3. இவ்வலுவலக திட்ட அனுமதி இ-10 / 16 / 2020 நாள் 09.03.2020

.......

**உத்தரவு :-**

சேலம் மாநகராட்சி, கொமாரசாமிபட்டி கிராமம் – Ward – J - Block - 55 - TS.No. 3 – அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி அடுக்கு மாடி குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கான புதியதாக கட்டிடம் கட்ட கீழ்குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி 09.03.2020–ந் தேதி முதல் 13.01.2025 முடிய உள்ள காலத்திற்கு திரு. K.S.ராமானுஜன், திருமதி. R. சுதா வாசுதேவன், என்பவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

1) கட்டிடம் கட்டப்படும் இடத்தில் முன் புறமாக கட்டிட உரிமையாளர் பெயர், கட்டிட அனுமதி எண், அனுமதி பெற்ற தேதி, அனுமதி காலம், அனுமதி நீடிப்பு காலம், கட்டிடம் கட்டப்படும் ஒப்பந்ததாரர் பெயர் ஆகிய விபரங்களை வெள்ளை நிற எழுத்துகள் கொண்டு 2x1 அளவு கொண்ட கருப்பு வண்ணம் நன்கு தெரியும் வண்ணம் மாட்டி வைக்கப்பட வேண்டும்.

2) அங்கீகரிக்கப்பட்ட திருத்திய வரைபடம் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வுக்கு காண்பிக்கும் வண்ணம் கட்டிட இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

3) கட்டிடத்தை அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி பூர்த்தி செய்த 15 தினங்களுக்குள் அல்லது பணி முடிவுற்ற 15 தினங்களுக்குள் சேலம் மாநகராட்சி 1994ம் வருடத்திய சட்டம் 129 ன்படி மாநகராட்சி ஆணையருக்கு சொத்து வரி விதிக்க கோரி அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

For METROPOLE HOMES,
R. Umamaheswari
PARTNER

For METROPOLE HOMES,
PARTNER

4) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிடங்களுக்கு / அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு சேலம் மாநகராட்சி சட்டம் பிரிவு 283-ன் படி அபராதமாக ஒன்றுக்கு 9 சதுர மீட்டருக்கு ரூ.50/– அபராதம் வசூலிக்கப்படும்.

5) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறுதான் கட்டிடம் கட்ட வேண்டும் மாறுதலாகவும் விதிகளுக்கு முரணாகவும் கட்டும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட மாட்டாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதல் அவசியம் எனில் அதற்காக திருத்திய வரைபடங்கள் அனுப்பி புது உத்திரவு பெற்ற பின்னரே கட்டிட வேலை ஆரம்பிக்க வேண்டும். இதை செய்ய தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்டம் 447 ன் படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் அபராத தொகையையும் உடனடியாக வசூல் செய்யப்படும்.

7) வழங்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்ட படி கட்டிட வேலை ஆறு மாத காலத்திற்குள் துவங்கப்பட வேண்டும் அவ்வாறு துவங்கப்படாவிட்டால் மீண்டும் கட்டிட அனுமதியை உரிய தொகையை செலுத்தி புதுப்பித்துக்கொண்ட பின்னரே கட்டிட வேலை துவங்கப்பட வேண்டும்.

8) ஏற்கனே உள்ள வீடுகள் மாற்றி கட்டுவதற்கு முன் மின் இணைப்புகள் இருப்பின் அதை அப்புறப்படுத்த வேண்டும்.

9) பொது சுகாதார சட்டம் பிரிவு 26,33–ன் படி மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து உத்திரவு பெறப்படாமல் புதியதாக கட்டப்பட்ட வீட்டில் குடிபுகக் கூடாது.

10) கட்டிட சம்பந்தப்பட்ட கல், மண் முதலியவற்றை சாலைகளில் போடக் கூடாது.

11) முனை இடத்தில் மீதமுள்ள காலியிடத்தில் நிழல் தரும் மரங்கள் நடப்பட வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்புபடி மழைநீர் சேகரிப்பு மனையில் செய்து முடிக்க வேண்டும்.

13) தவறான அல்லது மோசடியான ஆவணங்கள், தகவல்கள் (Misrepresentation or fraud) சமர்பித்து கட்டிட உரிமம் பெற்றுள்ளது தெரியவந்தால் சேலம் மாநகராட்சி சட்டம் பிரிவு 451(4)–ன் படி உரிமம் ரத்து செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை தொடரப்படும்.

14) கட்டிடத்தின் கூரையிலிருந்து மனையின் திறந்த வெளியிலிருந்தும் வரும் மழைநீரை சேமிக்கும் வகையில் தங்கள் மனைக்குள் மழைநீர் உறிஞ்சி குழிகள் அரசு பிரசுரங்களில் அறிவுறுத்தியுள்ள அளவுகளின் படி அமைக்க வேண்டும்.

15) புதிய கட்டிட விதிகளின்படி மருத்துவமனைகள், சமுதாய கூடங்கள், திருமண மண்டபங்கள் அனைத்து தங்கும் மனைகள் மற்றும் 150 ச.மீ பரப்புக்கு கூடுதலாக குடியிருப்புக்குச் கட்டிடங்களுக்கு சூரிய ஒளி சுடுநீர் அமைப்பு நிறுவவேண்டும்.

**இணைப்பு:– ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் – 1**
**2**
**உண்மை நகல்**

பெறுதல்:

**திரு. K.S.ராமானுஜன்,**
**திருமதி. R. சுதா வாசுதேவன்**
65– வெங்கடேசபுரம்,
அஸ்தம்பட்டி, சேலம் 636 007

ஆணையருக்காக,
சேலம் மாநகராட்சி.

நகல்: இ.நி.பொ/உ.பொ. கட்டிட கட்டுமானம், கண்காணித்து சேலம் ...

நகல்: உதவி ஆணையாளர் (வருவாய்)

For METROPOLE HOMES,
PARTNER

For METROPOLE HOMES,
PARTNER

**சேலம் உள்ளூர் திட்டக் குழும உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : திருமதி.ர.ராணி,பி.இ.,**

**திட்ட அனுமதி**

**நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 49–ன்கீழ்**

**ந.க.எண். 2315 /2019 சேஉதிகு** **நாள். 14.01 .2020.**

**ம.வ./சேஉதிகு எண். 02 /2020**

**க.வ.தி.அ/சேஉதிகுஎண். 02/2020**

**பொருள்** : திட்ட அனுமதி குடியிருப்பு கட்டிடம் – சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் – சேலம் மாநகராட்சி, குமாரசாமிபட்டி கிராமம். பழைய வார்டு–B, பிளாக்–16, ந.அ.எண்.76, புதிய வார்டு–J, பிளாக்–55, ந.அ.எண்.3–ல் 531.27 ச.மீ. பரப்பளவு கொண்ட மனைக்கு மனையிட ஒப்புதலும் அம்மனையில் (ஸ்டில்ட் + 5 தளங்கள்) கொண்ட 5 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு கட்டுமான உத்தேசத்திற்கு – திட்ட அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை** :

1. மனுதாரர் திரு.ராமானுஜன் மற்றும் ஒருவர், அவர்களின் விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் நாள்.24.10.2019, 28.11.2019 மற்றும் 07.01.2020. (Online Application No.2019004020322492 - 07, (SCR-28/11/2019 : 164469)
2. அரசாணை (நிலை) எண்.18. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (UD4(3)) துறை. நாள்.04.02.2019.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 19992/2011(1)Special Cell, நாள். 31.05.2018.
4. அரசாணை எண்.18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA1) துறை, நாள்.04.02.2019.
5. அரசாணை (நிலை) எண். 161, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. நாள். 26.06.2013.
6. அரசாணை (நிலை) எண். 86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. நாள். 28.03.2012.
7. அரசாணை எண்.135. வீட்டு வசதி மற்றம் நகர்ப்புற வளர்ச்சித் (SC1–2) துறை. நாள். 21.07.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20/2013/பிஏ1, நாள்.11.07.2013.
9. அரசாணை (நிலை) எண்.53. வீட்டு வசதி மற்றம் நகர்ப்புற வளர்ச்சித் (UD4(3)) துறை. நாள் 16.04.2018.
10. இவ்வலுவலகக் கடிதம் இதே எண் நாள். 01.11.2019. 04.12.2019 மற்றும் 20.12.2019.

...........

**உத்திரவு**

சேலம் உள்ளூர் திட்டக் குழுமப் பகுதி. சேலம் மாநகராட்சி. குமாரசாமிபட்டி கிராமம். பழைய வார்டு–B, பிளாக்–16, ந.அ.எண்.76, புதிய வார்டு–J, பிளாக்–55, ந.அ.எண்.3–ல் 531.27 ச.மீ. பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு ABCD என எல்லையிட்டு ம.வ./சேஉதிகு எண். 02 /2020 என எண்ணிடப்பட்டு மனையிட அனுமதியும் அம்மனையில் ஸ்டில்ட் + 5 தளங்கள் கொண்ட குடியிருப்புக் கட்டுமானத்திற்கு.

For METROPOLE HOMES,
R. Uma Maheswari
PARTNER

For METROPOLE HOMES,
Janani
PARTNER

<u>உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிட பரப்பு விபரம்</u> :

மனையிடத்தின் மொத்தப் பரப்பு .. 531.27ச.மீ

<u>உத்தேசக் கட்டுமானப் பரப்பு</u>

| Floor Details | Total Builtup Area in Sq.m. | Non FSI Area Covered Parking | Deduction | Incidental Structures | Total covered Area | No of Dewelling Units |
|---|---|---|---|---|---|---|
| Stilt Floor | 233.75 | 209.54 | -- | 24.21 | 24.21 | -- |
| Floor 01 | 238.00 | -- | 1.91 | -- | 236.09 | 1 No |
| Floor 02 | 238.00 | -- | 1.91 | -- | 236.09 | 1 No |
| Floor 03 | 238.00 | -- | 1.91 | -- | 236.09 | 1 No |
| Floor 04 | 238.00 | -- | 1.91 | -- | 236.09 | 1 No |
| Floor 05 | 238.00 | -- | 1.91 | -- | 236.09 | 1 No |
| **Total** | **1423.75** | **209.54** | **9.55** | **24.21** | **1204.66** | **5 Nos** |

**FSI = 2.305** (கூடுதல் FSI பரப்பு 125 ச.மீ. பரப்புக்கு அரசு வழிகாட்டு மதிப்பீட்டின் படி உரிய தொகை உரிய கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது)

மேற்கண்டவாறு பரப்பளவில் Stilt + ஐந்து தளங்களுடன் அமையும் 5 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புக் கட்டுமானத்திற்கு **<u>க.வ.தி.அ/சேஉதிகு எண். 02/2020</u>** என்ற எண்ணில் **14.01.2020 முதல் 5 (ஐந்து)** வருட காலத்திற்கு கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49 (2)-ன்படி திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant / developer and also the Architect / Licensed Surveyor and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
3. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப்பத்திரம், குத்தகைப் பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

3.

For METROPOLE HOMES,
R. Uma Maheswari
PARTNER

For METROPOLE HOMES,
Janaki
PARTNER

4. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் ஆகிய விபரங்கள் கொண்ட பலகை நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

5. "The Provisions in the G.O(MS) No. 17, H&UD [UD4(3)] Department, Dated:05.02.2016 shown in Reference -3 relating to installation and use of solar energy system, should be followed

6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி.
"The Tamil Nadu Government in G.O. MS. No. 112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Act 2016. The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate regulatory Authority."

7. பார்வை 9–ல் கண்ட அரசாணையின்படியும், பார்வை 3 ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், When the construction reached at Plinth level, மனுதாரர் உரிய முறையில் Construction Continuance Certificate (CCC) விண்ணப்பித்து பெறப்பட்ட பின்னரும், When the construction completed civil works மனுதாரர் உரிய முறையில் Completion Certificate (CC)–க்கு விண்ணப்பித்து பெறப்பட்ட பின்னரும் மேற்கொண்டு கட்டிட பணிகள் தொடரப்பட வேண்டும். The applicant or buyer or a worker or any other person shall not occupy the building without valid completion certificate form Salem Local Planning Authority.

8. பிரஸ்தாப கட்டிட உத்தேசம் குறித்து நீதி மன்ற வழக்கு நிலுவை ஏதேனும் அறியப்படின் கட்டிட திட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

9. கூடுதலாக உத்தேசிக்கப்பட்டுள்ள FSI பரப்புக்கு 125 ச.மீ. உரிய கணக்கு தலைப்பில் Premium FSI தொகை செலுத்தப்பட்டுள்ளது.

10. மனை இடத்தில் அமைந்துள்ள நிலையில் உள்ள கட்டுமானம் இடித்து அகற்றிய பின்னரே உத்தேச கட்டிட பணிகள் துவங்கப்பட வேண்டும்.

## பொது நிபந்தனைகள்

1. திட்ட அனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35–1972)–ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

2. பிரிவு 79, நகர் ஊரமைப்பு சட்டம் 1971, (சட்டம் 35–1972)–ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64 (1)–ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர் / அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

3. சேலம் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் திட்ட அனுமதி அளித்த பிறகு (i) திட்ட அனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ (ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. (i) அரசாணை எண். 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002–ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும்.
   (ii) குளியல் அறை மற்றும் Wash Basin கழிவு நீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

5. தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் அமையும் (5 Dwellings units) அடுக்குமாடி குடியிருப்புக் கட்டுமானத்திற்கு சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating system) அமைக்கப்பட வேண்டும்.

For METROPOLE HOMES,
Janani
PARTNER

For METROPOLE HOMES,
R. Uma Maheswari
PARTNER

6. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டுமானத்திற்கு Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும். நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி Clause 2A of Flay Ash Notification 2009பின்பற்றப்பட வேண்டும்.

7. வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதனடியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

8. அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.11.2004–ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.

9. பொருந்தும் இனங்களுக்கு உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய சட்டம் பிரிவு 25 (Water Act)–ன்படி வாரிய இசைக்கும் (Consent) பெறப்பட வேண்டும்.

10. கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

11. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

12. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தம்சொந்த செலவில் செய்து தர வேண்டும். உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

13. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display)வைக்கப்பட வேண்டும்.

14. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

15. கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் வயரிங் செய்யப்பட வேண்டும்.

16. கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

17. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

18. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

19. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுககு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20. இக்கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து மனுதாரரும் சம்பந்தப்பட்ட பொறியாளரும் முழுப்பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

1. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".

2. பார்வை 4 மற்றும் 9–ல் சுட்டிய அரசாணைகளின்படி கீழ்க்காணும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

For METROPOLE HOMES,
Janaki
PARTNER

..5..

For ME[illegible] HOMES,
R. Umamaheswari
PARTNER

i. The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney Holder and any other Person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall not put the building to use without obtaining Completion Certificate from the Assistant Director/Member Secretary, Salem Local Planning Authority, Salem.

ii. a) Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney Holder and any other Person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit the application along with the plan showing the Site Boundary, dimension of the Building and the setback on all around and the plan must be authenticated by the applicant and Architect/Structural Engineer/Licensed Surveyor for the issue of Construction Continuance Certificate (CCC).

b) Also, the Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney Holder and any other Person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit the application along with a drawing/plan showing the actual Construction made at site when the construction is completed without any requirement of further civil works for the issue of Completion Certificate (CC).

iii. The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney Holder and any other Person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall comply and other condition/directions stipulated in the operational guidelines issued/subsequently to be issued by the DTCP.

உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணம் முழுமையாக பார்வை 6–ல் கண்ட அரசாணையின்படி மனுதாரரால் பார்வை 1–ல் கண்ட 07.01.2020 கடிதம் மூலம் செலுத்தப்பட்டு விபரம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் சுட்டிய அரசாணையின்படி ஸ்டில்ட் - ஐந்து தளங்கள் (5 Dwellings units) குடியிருப்புக் கட்டிடத்தின் மொத்த பரப்பிற்கும் Completion Certificate Charges மனுதாரரால் முழுமையாக உரிய அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டு விபரம் பெறப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நடைமுறைகளுக்கு உட்பட்டு உரிய உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ).
சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம்.

**இணைப்பு**
முத்திரையிட்ட வரைபடம் – 2
தொகுப்புகள்

**பெறுநர்**
ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

**நகல்**
திரு.K.S.ராமானுஜன் மற்றும் ஒருவர்,
5/714, வெங்கடேசபுரம் எக்ஸ்டென்சன்,
குமாரசாமிபட்டி .
சேலம்.

For METROPOLE HOMES,
PARTNER

For METROPOLE HOMES,
PARTNER